**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23- ஆம் நாள் திங்கட்கிழமை

TNTV06-000088-2011

**அசல் வழக்கு எண்.26/2011**

1. ஜெயராமன் (இறந்தவர்)
2. வசந்தா
3. கல்யாணசுந்தரம் (இறந்தவர்)
4. கலைமணி
5. இளவர் சந்தோஸ்

   (இளவருக்காக அவரது காப்பாளரும்

   தாயாருமான 4 வது வாதி கலைமணி மூலமாக)
6. அகிலாண்டேஸ்வரி
7. மோகனசுந்தரம்
8. பூங்குயிலன்

(Amended as per order in I.A.No.573/2024, Dated: 03.01.2025)

... வாதிகள்

**//எதிர்//**

1. சேகர்
2. பானுமதி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்களும், 2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதிக்கு தினசரி நாளிதழ் மூலம் தகவல் தெரிவித்தும் 1ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினராக

ஆக்கப்பட்டுள்ளார். இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

// **தீர்ப்புரை** //

வழக்கு சொத்து கடந்த 15.03.2001ம் தேதியில் ஏற்பட்டுள்ள கிரய ஒப்பந்தப்படி நீதிமன்றத்தார் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் 2வது மற்றும் 4 முதல் 8 வாதிகளுக்கு பிரதிவாதிகள் கிரய ஆவணம் எழுதி கொடுக்குமாறு உத்தரவிட்டும், பிரதிவாதிகள் தவறும் பட்சத்தில் பிரதிவாதிகளுக்காக நீதிமன்றத்தாரே 2 மற்றும் 4 முதல் 8 வாதிகள் பெயரில் கிரய ஆவணத்தை ஏற்படுத்தி கொடுக்க உத்தரவிட்டும், வழக்கு செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **திருத்தப்பட்ட வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்** :-

**2.1.** இவ்வழக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து மன்னார்குடி வட்டம், அரவத்தூர் வருவாய் கிராமம், வேங்கைபுரம் கிராமத்தில் புல எண்.153-3 ல் 0.72 செண்ட் பரப்பளவு கொண்ட நஞ்சை சாகுபடி நிலம் வழக்கு சொத்து மன்னார்குடி நகரம், பெரிய கம்மாளத்தெரு சிங்காரவேல் பத்தர் என்பவருக்கு சொந்தமானதாகும்.

**2.2.** வழக்கு சொத்தை சிங்காரவேல்பத்தர் 1வது வாதியிடம் குத்தகை சாகுபடிக்காக பல ஆண்டுகளுக்கு முன்பே சுவாதீனம் கொடுத்துவிட்டார். வழக்கு சொத்தில் 1வது வாதி சாகுபடி செய்து அனுபவித்து வருகிறார். வழக்கு சொத்தை ஒட்டியுள்ள புறம்போக்கு ஸ்தலத்தில் 1வது வாதி குடியிருந்தும் வருகிறார். கடந்த 2001 மார்ச் மாதத்தில் வழக்கு சொத்தை சிங்காரவேல்பத்தர் வேறு நபரிடம் கிரயம் செய்ய முயற்சித்ததால் 1வது வாதி

நீண்ட கால குத்தகை அனுபவத்தை அனுசரித்து வழக்கு சொத்தை 1வது வாதிக்கு கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்று கிராம முக்கியஸ்தர்கள் மூலமாக சமரசம் பேசப்பட்டது. அதை அனுசரித்து 05.03.2001ம் தேதியில் சிங்காரவேல்பத்தர் 1வது வாதிக்கு ஒரு கிரய ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்துள்ளார்.

**2.3.** மேற்படி கிரய ஒப்பந்தப்படி குழி ரூ.100/- வீதம் வழக்கு சொத்தான 216 குழிக்கு ரூ.21,600/- கிரயத்தொகையாக நிச்சயிக்கப்பட்டு ஒப்பந்த தேதியிலேயே ரூ.21,000/-த்தை 1வது வாதியிடம் இருந்து சிங்காரவேல் பெற்றுக்கொண்டும் பாக்கி கிரயத் தொகை ரூ.600/- ஐ ஒரு வருடக் கெடுவில் கொடுத்து 1வது வாதி கேட்கும்பொழுது 1வது வாதிக்கு கிரய ஆவணம் எழுதிக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

**2.4.** மேற்படி சிங்காரவேல் பத்தருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்ததால் உடன் கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொள்ள இயலவில்லை. சிங்காரவேல் பத்தர் 2001ம் வருட இறுதியில் இறந்துவிட்டார். சிங்காரவேல் பத்தருக்கு பிரதிவாதிகள் இருவர் மட்டும் வாரிசுதாரர்கள் ஆவார்கள். சிங்காரவேல் விட்டுச்சென்ற சொத்துக்களை பிரதிவாதிகளே அனுபவித்து வருகிறார்கள். அந்த வகையில் சிங்காரவேல் பத்தர் எழுதிக் கொடுத்துள்ள ஒப்பந்தப்படி வழக்கு சொத்தை 1வது வாதிக்கு கிரய ஆவணம் எழுதிக் கொடுக்க பிரதிவாதிகள் சட்டப்படி கடமைப்பட்டுள்ளார்கள்.

**2.5.** தாவா சொத்தை 1வது வாதிக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுக்குமாறு பிரதிவாதிகளை 1வது வாதி அவ்வப்போது நேரில் கேட்டு வந்துள்ளார். 1ம் பிரதிவாதி குடும்ப சூழ்நிலை காரணமாக அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவதால் பிற்பாடு கிரய ஆவணம் எழுதிக்கொடுக்கப்படும் என்று 2ம் பிரதிவாதி 1ம் வாதியிடம் ஒப்புக்கொண்டார். ஒப்புக்கொண்டவாறு கிரய ஆவணம் எழுதிக் கொடுக்கப்படவில்லை. 2010 அக்டோபர்

மாதத்தில் 2 ம் பிரதிவாதியை 1 ம் வாதி நேரில் சந்தித்து கேட்டபோது 1 ம் பிரதிவாதி ஊருக்கு வரவில்லை என்றும், அவரை வரவழைத்து 3 மாத கெடுவிற்குள் கிரய ஆவணம் எழுதிக் கொடுக்கப்படும் என்றும், 2 ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டார். அதற்கு பிறகு கிரய ஆவணத்தை எழுதிக் கொடுக்காமல் 1 ம் வாதியை மோசடி செய்யும் எண்ணத்தில் செயல்பட்டு வந்ததால் பிரதிவாதிகளுக்கு 22.12.2010 ம் தேதி 1 ம் வாதியால் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

**2.6.** 22.12.2010 ம் தேதியில் 1 ம் வாதி கொடுத்துள்ள அறிவிப்பு படி கிரய ஆவணம் எழுதிக்கொள்வதற்காக 1 ம் வாதி 27.12.2010 ம் தேதி மன்னார்குடி சார்பதிவகத்தில் பிரதிவாதிகளுக்காக காத்திருந்தார். ஆனால் அந்த தேதியில் பிரதிவாதிகள் கிரய ஆவணம் எழுதிக் கொடுக்க முன்வரவில்லை. மேற்படி 2 ம் பிரதிவாதியிடம் இருந்து 06.01.2011 ம் தேதியில் 1 ம் வாதிக்கு 08.01.2011 ம் தேதியில் பதில் அறிவிப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

**2.7.** மேற்படி பதிலறிவிப்பில் 1 ம் வாதியின் அறிவிப்பு விவரங்களை மறுத்தும், சிங்காரவேல் பத்தர் எழுதிக்கொடுத்துள்ள கிரய ஒப்பந்தத்தை மறுத்தும், மற்றும் இதர பொய்யான விவரங்களை கண்டும் சொல்லப்பட்டுள்ள பதில் அறிவிப்பு விவரங்களை 1 ம் வாதி ஆட்சேபணை செய்கிறார். மேற்படி பதில் அறிவிப்புப்படி கிரய ஆவணம் எழுதிக் கொடுக்க தயாராக இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், 15.03.2001 ம் தேதியில் ஏற்பட்டுள்ள கிரய ஒப்பந்தப்படி 1 ம் வாதி பெயரில் கிரய சாசனம் எழுதிக் கொடுக்க பிரதிவாதிகள் சட்டப்படி கட்டுப்பட்டுள்ளதாலும், ஏற்றதை ஆற்றுக பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.8.** 15.03.2001 ம் தேதியில் ஏற்பட்டுள்ள கிரய ஒப்பந்தத்தில் கண்டுள்ளவாறு பாக்கித்தொகை ரூ.600/-ஐ பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால் மேற்படி

தொகையை நீதிமன்றத்தில் வைப்புத்தொகையாக வைக்க உத்தரவிடக்கோரி 1ம் வாதியால் Lodgment Schedule தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.9.** கடந்த 15.03.2001ல் ஏற்பட்டுள்ளள கிரய ஒப்பந்தத்தில் 1ம் வாதி 1வது நபர் ஒப்புக்கொண்டு கேட்டுக்கொள்ளும்போது 1ம் நபருக்கு 2 வது நபர் கிரய சாசனம் எழுதிக் கொடுக்கவும் ஒப்புக்கொண்டு கிரய எக்ரிமெண்ட் எழுதிக்கொண்டோம் என்று குறிப்பிட்டு கிரய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாலும், அதை அனுசரித்து கிரய ஆவணம் எழுதிக் கொடுக்க கேட்டு 1ம் வாதியால் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ள 22.12.2010ம் தேதியில் இருந்தும், அதற்காக 1ம் வாதி தயாராகவும், விருப்பத்துடனும் (Ready and Willingness) மன்னார்குடி சார்பதிவகத்தில் காத்திருந்த கெடு தேதியான 27.12.2010ம் தேதியிலிருந்தும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கு காலாவதி சட்டப்படி பாதிக்கப்படவில்லை.

**2.10.** வழக்கு சொத்து பல ஆண்டுகளாக 1ம் வாதியின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருவதால் இவ்வழக்கில் பிரதிவாதிகள் சுவாதீனம் ஒப்படைக்குமாறு பரிகாரம் கேட்கப்படவில்லை. மேலும், வழக்கு சொத்தை பொருத்து பொய்யான விவரங்களை கண்டு 1ம் வாதி வழக்கு சொத்தை ஆக்கிரமித்து வைத்துள்ளதாகவும், அதற்காக சொத்து சுவாதீனம் கேட்டும் 2ம் பிரதிவாதியால் 1ம் வாதியின் மீது இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.194/2010 தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறது.

**2.11.** மேற்படி அசல் வழக்கில் வழக்கு சொத்து சிங்காரவேல் பத்தருக்கு சொந்தமானது என்பதும், பிரதிவாதிகள் சிங்காரவேல் பத்தரின் வாரிசுதாரர்கள் என்பதையும் தவிர இதர விவரங்கள் யாவும் பொய்யானதும், மோசடியானதும் ஆகும். மேற்படி அசல் வழக்கு எண்.194/2010 வழக்கு நடவடிக்கையால் பாதிக்கப்படவில்லை. மேற்படி வழக்கு

விசாரணை காலத்தில் 1ம் வாதி ஜெயராமன் இறந்துவிட்டார். மேற்படி 1ம் வாதியின் வாரிசுதாரர்களில் ஒருவரான கல்யாணசுந்தரம் என்பவரும் வழக்கு விசாரணை காலத்தில் இறந்துவிட்டதால் இறந்துபோன ஜெயராமன் மற்றும் கல்யாணசுந்தரத்தின் வாரிசுதாரர்கள் 2 முதல் 8 வாதிகள் ஆவார்கள். வழக்கு சொத்து கடந்த 15.03.2001ம் தேதியில் ஏற்பட்டுள்ள கிரய ஒப்பந்தப்படி நீதிமன்றத்தார் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் 2 வது மற்றும் 4 முதல் 8 வாதிகளுக்கு பிரதிவாதிகள் கிரய ஆவணம் எழுதி கொடுக்குமாறு உத்தரவிட்டும், பிரதிவாதிகள் தவறும் பட்சத்தில் பிரதிவாதிகளுக்காக நீதிமன்றத்தாரே 2 மற்றும் 4 முதல் 8 வாதிகள் பெயரில் கிரய ஆவணத்தை ஏற்படுத்தி கொடுக்க உத்தரவிடுமாறும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 3) <u>2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>

**3.1.** வாதிகளின் வழக்கு சரியல்ல. சட்டப்படி நிலை நிறக் தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. வழக்கு விவரங்களை 2ம் பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார். வாதிகளே வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

**3.2.** வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முற்றிலும் மோசடியானது. எந்தவித அடிப்படை ஆதாரம் அற்றது. 1ம் வாதிக்கு 15.03.2001ல் பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்துபோன சிங்காரவேல் பத்தர் வழக்கு சொத்தை ரூ.21,600/-க்கு கிரயம் பேசி ரூ.21,000/-த்தை கிரய முன்பணமாக பெற்றுக்கொண்டதாகவும், பாக்கி ரூ.600/-ஐ ஒரு வருட கெடுவிற்குள் பெற்றுக்கொண்டு ஒரு கிரய ஒப்பந்தம் செய்து கொண்டதாக கூறியிருப்பது முற்றிலும் மோசடியானது. அப்படி எந்தவொரு கிரய ஒப்பந்தத்தையும் பிரதிவாதிகளின் தகப்பனார் சிங்காரவேல் பத்தர் இறந்துபோன 1ம் வாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை.

சொத்தை விற்கவும் இல்லை. அதற்காக எந்தவொரு தொகையையும் கிரய அட்வான்ஸாக பெற்றுக்கொள்ளவுமில்லை.

**3.3.** மேற்படி வழக்கானது பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட சொத்து சுவாதீன வழக்காகிய அசல் வழக்கு எண்.194/2010 வழக்கை முறியடிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட மோசடி வழக்காகும். மேற்படி வழக்கு சொத்து 2ம் பிரதிவாதிக்கு சொந்தமானது. 2ம் பிரதிவாதியின் சகோதரர் கடந்த 10 வருடங்களாக இருக்கும் இடம் தெரியாமல் காணாமல் போய்விட்டார். 2009ம் ஆண்டு இறந்துபோன 1ம் வாதி வழக்கு சொத்தை ஆக்கிரமித்து நஞ்சை நிலத்தை தூர்த்து மேடாக்கி அதில் ஒரு ஆர்.சி.சி கான்கிரீட் வீடு கட்டிவிட்டார். அந்த ஆக்கிரமிப்பை அகற்றி செயலுறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வாதிகளுக்கு நல்ல பதில் கூறக்கூடிய கட்சிகள் இல்லை என்பதால், மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்ட ஒரு ஆண்டு கழித்து இறந்துபோன பிரதிவாதியின் தகப்பனார் சிங்காரவேல் பத்தரிடம் 15.03.2021ல் ஒரு கிரய ஒப்பந்தம் செய்து கொண்டதாக அவருக்கு வேண்டிய நபர்களின் துணை கொண்டு மோசடியாக ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.4.** மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் செயற்கையாக ஒரு வழக்கை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்காக தயாரிக்கப்பட்டதாகும். பிரதிவாதியின் தகப்பனார் எந்தவொரு கிரய ஒப்பந்தத்தையும் 1ம் வாதிக்கு எழுதிக்கொடுக்காத நிலையில் அவரது வாரிசுகளாகிய பிரதிவாதிகள் வாதிகளுக்கு கிரய சாசனம் செய்து கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல. வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள 15.03.2021ம் தேதியிலிருந்து உரிய காலக்கெடுவிற்குள்

வழக்கு தாக்கல் செய்யாத காரணத்தால் வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரதிவாதியோ, அவரது தகப்பனாரோ மேற்படி ஆவணத்தை எழுதிக்கொடுக்கவில்லை. அதில் கையெழுத்திடவில்லை. மறுபயன் ஏதும் பெற்றுக்கொள்ளவில்லை. எனவே வாதிகளின் வழக்கு மூலமற்ற பொய்யான வழக்கு என்பதால் வாதிகளின் வழக்கை 2ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்.

**4)** இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டன.

**வழக்கெழுவினாக்கள் :-**

1. இந்த வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?
2. கடந்த 15.03.2001ம் தேதியிட்ட கிரய ஒப்பந்தப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதா? மற்றும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதா?
3. வாதிகள் 15.03.2001ம் தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்றிட தயாராகவும், விருப்பத்துடன் (Ready and Willingness) உள்ளார்களா?
4. வாதிகள் கோருகின்ற ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?
5. இதர பரிகாரங்கள் என்ன?

**5) இருதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் :-**

வாதிகள் தரப்பில் 6ம் வாதி அகிலாண்டேஷ்வரி என்பவர் வா.சா.1 ஆகவும், கண்ணப்பன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், வா.சா.2ன் மூலம் வா.சா.ஆ.6 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 2ம்

பிரதிவாதி பானுமதி என்பவர் பி.சா.1 ஆகவும், துரைராஜ் என்பவர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டனர். பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை.

6) **வாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

1ம் வாதியானவர் தாவா சொத்தினை பிரதிவாதியின் தந்தையான சிங்காரவேல் பத்தரிடம் கிரயம் பெறுவதற்காக குழி ரூ.100/- வீதம் 216 குழிக்கு ரூ.21,600/-க்கு பேசி முடிக்கப்பட்டு 15.03.2001ம் தேதியன்று ரூ.21,000/- ஐ முன்பணமாக கொடுத்து மீதமுள்ள ரூ.600/-ஐ ஒரு வருட கெடுவில் கொடுத்து 1ம் வாதி கேட்கும்போது 1ம் வாதிக்கு கிரய ஆவணம் எழுதிக்கொடுக்க ஒப்புக்கொண்டு கிரய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றும், மேலும் மேற்கண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற 1ம் வாதி விருப்பத்துடனும் தயாராக இருந்தும், பிரதிவாதிகளின் தந்தை இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான பிரதிவாதிகள் கிரய சாசனம் எழுதி தரவில்லை என்பதை வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால், பிரதிவாதிகள் தாவா சொத்து தொடர்பாக கிரய உடன்படிக்கையின்படி மீதமுள்ள ரூ.600/-ஐ வாதிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு தாவா சொத்தினை கிரய சாசனம் எழுதிக்கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். ஆகவே, வாதிகள் கோருகின்ற ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என வாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

7) **2ம் பிரதிவாதி தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

தாவா சொத்தினை 1ம் வாதிக்கு பிரதிவாதிகளின் தந்தை விற்பதற்காக சொல்லி முன் பணம் பெற்றுக்கொண்டு கிரய ஒப்பந்த ஆவணத்தை எழுதி தரவில்லை என்றும், 1ம் வாதியானவர் தாவா சொத்தில் ஆக்கிரமித்துள்ளதால் 1ம் வாதிக்கு எதிராக

2ம் பிரதிவாதியானவர் மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் வசப்பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதால், அந்த வழக்கில் கட்சி செய்ததற்கு நல்ல பதில் இல்லை என்பதால் அந்த வழக்கு தாக்கல் செய்து ஓர் ஆண்டு முடிந்த நிலையில் தனக்கு வேண்டிய நபர்களின் துணையுடன் மோசடியான கிரய உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், வாதிகள் தரப்பில் கிரய உடன்படிக்கை ஏற்பட்டதை நிரூபிக்கவில்லை என்றும், மேலும், கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு பிரதிவாதிகளின் தந்தை இறந்து 10 ஆண்டுகள் கழித்து, இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் 2ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என 2ம் பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

8) <u>தீர்வு</u> ;-

<u>எழுவினா-1 மற்றும் எழுவினா-2க்கான தீர்வுகள்</u> ;-

i) வாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக 6ம் வாதி அகிலாண்டேஷ்வரி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக கடந்த 15.03.2001ம் தேதியன்று 1ம் வாதி பெயரில் உள்ள விற்பனை ஒப்பந்தத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 22.12.2010ம் தேதியன்று 1ம் வாதி கொடுத்த அறிவிப்பு மற்றும் அஞ்சலக ஒப்புகை அட்டை அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 06.01.2011ம் தேதியன்று 2வது பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு சார்வாகாமல் திரும்பி வந்த அஞ்சல் உறை வா.சா.ஆ.4 ஆகவும், கல்யாணசுந்தரம் என்பவரின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து கண்ணப்பன் என்பவர் வா.சா.2

ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.2 ன் மூலம் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து (வா.சா.2 கண்ணப்பன்) வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

ii) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 15.03.2001 ம் தேதியன்று 1ம் வாதிக்கு பிரதிவாதிகளின் தந்தை சிங்காரவேல் பத்தர் தாவா சொத்தை விற்பனை செய்ய ஒப்புக்கொண்டு கிரய உடன்படிக்கை எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணமானது பிரதிவாதிகள் தரப்பில் 1ம் வாதியால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என கட்சி செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதிகளைச் சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

iii) 1ம் வாதியின் வாரிசுதாரர்களில் ஒருவரான கல்யாணசுந்தரம் இறந்துவிட்டார் என்பதும், அவரின் வாரிசுதாரர்கள் 2, 4 மற்றும் 5 வாதிகள் என்பதும் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 மூலம் தெரிய வருகிறது. வா.சா.ஆ.1 ஆவணத்தை நிரூபிக்கும் விதமாக வாதிகள் தரப்பில் 1ம் வாதி இறந்துவிட்டதால் 1ம் வாதியின் வாரிசுதாரரான 6ம் வாதியாகிய அகிலாண்டேஸ்வரி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்ட கண்ணப்பன் மற்றும் வேலாயுதம் ஆகியோரில் கண்ணப்பன் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 ஆவணம் குறித்து சாட்சியமளிக்கப்பட்டது. மாறாக பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணமானது 1ம் வாதியால் மோசடியாக வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று வாதம் செய்யப்பட்டது.

iv) வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி கொண்ட தரப்பினர்களான பிரதிவாதிகளின் தந்தை சிங்காரவேலு பத்தரும், 1ம் வாதி ஜெயராமனும் காலமாகிவிட்டார்கள். அந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்ட கண்ணப்பன் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள 2 வது சாட்சியின் கையெழுத்து தன்னுடையது என சாட்சியமளித்துள்ளார். வா.சா.2 ஆனவர் தனது சாட்சியத்தில், **"15.03.2001 ம் தேதியன்று 1ம் வாதிக்கு பிரதிவாதிகளின் தந்தை தாவா சொத்தினை விற்பனை செய்ய ஒப்புக்கொண்டு கிரய ஆவணம் எழுதப்பட்டது என்றும், அதில் சாட்சியாக நானும், வேலாயுதம் என்பவரும் கையொப்பமிட்டதாக"** சாட்சியம் அளித்துள்ளார்.

v) மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, **"வா.சா.ஆ.1 ஆவணமானது எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் ஞாபகமில்லை. யார் யார் கையெழுத்திட்டார்கள் என்றால் நானும், பழனிவேலும், சிங்காரவேலும், வேலாயுதமும் கையெழுத்திட்டார்கள். அனைவரும் ஒரே பேனாவில் கையெழுத்திட்டோமா என்றால் ஆமாம்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vi) மேற்படி சாட்சியத்தின்படி வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்ட தேதி ஞாபகம் இல்லை என்பது தெரிய வருகிறது. மேலும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுதிட்ட அனைவரும் ஒரே பேனாவில் கையெழுத்திட்டதாக சாட்சியம் அளித்துள்ளதால் மேலும், அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பங்களை வா.சா.2-டம் காண்பித்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, **"வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் அனைத்தும் வெவ்வேறு பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், சிங்காரவேலு தனியாக பேனா வைத்து கையெழுத்திட்டுள்ளார்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vii) மேலும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விபரங்கள் குறித்து வா.சா.2 ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, "**வா.சா.ஆ.1 ஆவணம் கெடுவிதித்து ஒப்பந்தம் எழுதப்பட்டதா? என்றால் இல்லை"** என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், வா.சா.2 ன் நிரூபண வாக்குமூலத்தில், **"15.03.2001ம் தேதியில் சிங்காரவேலு பத்தர் ஜெயராமனுக்கு ஒரு கிரய எக்ரிமெண்டை எழுதிக்கொடுத்தார். கிரய தொகை ரூ.21,600/- என்று பேசி தீர்த்துக்கொண்டு அதே தேதியில் ரூ.21,000/-ஐ ஜெயராமனிடமிருந்து சிங்காரவேல் பத்தர் அட்வான்சாக பெற்றுக்கொண்டார். பாக்கித்தொகையை ஒரு வருடத்திற்குள் கொடுத்து கிரய சாசனம் எழுதி கொடுக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த எக்கிரிமெண்டில் நானும், வேலாயுதமும் சாட்சி கையொப்பம் இட்டோம்"** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள உடன்படிக்கை குறித்த கெடுவும், குறுக்கு விசாரணையில், கெடு விதிக்கவில்லை என்றும், முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

viii) மேலும், தாவா சொத்தை விற்பனை செய்வது தொடர்பாக ஏற்படுத்திக்கொண்ட கிரய உடன்படிக்கையில் கிரய தொகை ரூ.21,600/- நிர்ணயிக்கப்பட்டு அதில் ரூ.21,000/- முன்பணமாக கொடுக்கப்பட்டது என்று வாதிகள் தரப்பில் கட்சி செய்யப்பட்டதை பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. மேற்படி கிரய உடன்படிக்கை தொடர்பாக ரூ.21,000/-ஐ எந்த வகையில் 1ம் வாதி பிரதிவாதிகளின் தந்தை சிங்காரவேல் பத்தருக்கு கொடுத்தார் என்பது குறித்து வா.சா.ஆ.1 ஆவணத்தை பொறுத்து கண்ணுற்ற சாட்சியான வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, **" என்ன வகையான நோட்டு கொடுத்தார் என்றால் அனைத்து வகையான நோட்டு கொடுத்தார்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி எந்த வகையான நோட்டுகள் எவ்வளவு எண்ணிக்கையில் கொடுக்கப்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்பது தெரிய வருகிறது.

ix) வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணத்தின் செல்லும் தன்மை குறித்து 6 ம் வாதியும், சாட்சி கையொப்பமான வா.சா.2 ம், சாட்சியம் அளித்ததன் மூலம் மேற்கண்ட ஆவணம் வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக வாதம் செய்யப்பட்டதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விபரங்கள் குறித்து வா.சா.2 தனது நிரூபண வாக்குமூலத்திலும், குறுக்கு விசாரணையிலும் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார் என்பதும், மேலும், வா.சா.ஆ.1 ஆவணமானது பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அதனுடன் தொடர்புடைய ஆவணம் எதுவும் ஒத்துரைக்கும் விதத்தில் இல்லை என்பது தெரிய வருகிறது.

x) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 22.12.2010 ம் தேதியன்று 1 ம் வாதியானவர் பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்பதும், மேற்கண்ட அறிவிப்பை 1 ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் வாதியின் வழக்கறிஞருக்கு திருப்பப்பட்ட அஞ்சலக உறை வா.சா.ஆ.4 என்பதும், வா.சா.ஆ-2 ஆவணமான சட்ட அறிவிப்பை 2 ம் பிரதிவாதியானவர் பெற்றுக்கொண்டு 06.01.2011 ம் தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்பது வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் தெரிய வருகிறது. வா.சா.ஆ-1 ஆவணமான கிரய உடன்படிக்கை 15.03.2001 ல் எழுதப்பட்டு மேற்கண்ட ஆவணத்தை தொடர்ந்து கிரய சாசனம் எழுதி தர வேண்டும் என்று 22.12.2010 ம் தேதியன்று 1 ம் வாதி பிரதிவாதிகளுக்கு 9 ஆண்டுகளுக்கு பிறகு சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும், 15.03.2001 ம் தேதியன்று எழுதப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரய உடன்படிக்கைக்கான கெடு

எதுவும் விதித்து எழுதப்படாததால் மேற்கண்ட ஆவணம் காலாவதி சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என வாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டது. மாறாக பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட ஆவணம் கெடு விதித்து எழுதப்பட்டு உரிய காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யாததால் காலாவதி தோஷத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டது என பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

xi) வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், " **நம்மில் 2 வது நபருக்கு சொந்தமானதும், 1 வது நபர் நீண்டகால குத்தகை சாகுபடியில் இருக்கும் இதன் கீழ்காணும் நிலத்தை ஊர் பஞ்சாயத்தார்கள் சொல்லிவிட்டபடிக்கு 1வது நபருக்கு கிரயம் செய்து கொடுக்க ஒப்புக்கொண்டும், உபயானு சம்மதம் கிரயமாக நிச்சயித்துக்கொண்டதை குழி 1க்கு ரூ.100/- வீதம் மொத்தம் உள்ள 216 குழிக்கும் தீர்த்துக்கொண்டது ரூ.21,600/- ( இருபத்து ஓராயிரத்து ஆறு நூறு மட்டும்) நாளது தேதியில் அட்வான்சாக ரூ.21,000/- (இருபத்து ஓராயிரம் மட்டும்) பெற்றுக்கொண்டபடியால் மீதமுள்ள ரூ.600/-ஐ (ஆறு நூறு மட்டும்) ஒரு வருட கெடுவில் கொடுத்தும், 1வது நபர் ஒப்புக்கொண்டு கேட்டுக்கொள்ளும்போது 1வது நபருக்கு 2 வது நபர் கிரய சாசனம் எழுதிக்கொடுக்கவும் ஒப்புக்கொண்டு இந்த கிரய எக்ரிமெண்ட் எழுதிக்கொண்டும்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

xii) வாதிகள் தரப்பில், பாக்கி கிரயத்தொகை ரூ.600/-ஐ ஒரு வருட கெடுவில் கொடுத்து 1வது வாதி கேட்கும்போது 1வது வாதிக்கு கிரய ஆவணம் எழுதி கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது என்று கட்சி செய்யப்படுகிறது. மேலும், வா.சா.ஆ.1 ஆவணத்தில் கால கெடு எதுவும் நிர்ணயிக்காததால் 1ம் வாதி பிரதிவாதிகளுக்கு கிரய சாசனம் எழுதிக்கொடுக்க வேண்டி சட்ட அறிவிப்பு அனுப்பி அதை பெற்றுக்கொண்டு மறுத்த தேதியிலிருந்து கால வரம்பு தொடங்குகிறது என்று கட்சி செய்து " மாண்புமிகு சென்னை

உயர்நீதிமன்ற தீர்ப்பினை 2006 (4) CTC 326 Balaraman and others /vs/ Pattammal and others" என்ற உத்தரவினை மேற்கோள் காட்டி வாதம் செய்யப்பட்டது.

xiii) மேற்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவில் கிரய உடன்படிக்கை ஆவணத்தை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான காலகெடு நிர்ணயம் செய்யாத சூழலில் மேற்கண்ட உடன்படிக்கையை நிறைவேற்றும் பொறுப்பு சட்ட அறிவிப்பை வாதிகள் தரப்பில் அனுப்பி பிரதிவாதிகள் தரப்பில் மறுத்த தேதியிலிருந்து காலகெடு தொடங்குகிறது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த வழக்கில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கால கெடு ஓராண்டு என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற வழக்கின் உத்தரவு இந்த வழக்கிற்கு பொருந்தாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

xiv) வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் காலகெடு நிர்ணயம் செய்யப்படவில்லை என வாதம் செய்யப்படுவதை பரிசீலனை செய்கையில், " **மீதமுள்ள ரூ.600/-ஐ (ஆறு நூறு மட்டும்) ஒரு வருட கெடுவில் கொடுத்தும் 1வது நபர் ஒப்புக்கொண்டு கேட்டுக்கொள்ளும்போது 1வது நபருக்கு 2 வது நபர் கிரய சாசனம் எழுதிக்கொடுக்கவும் ஒப்புக்கொண்டு இந்த கிரய எக்ரிமெண்ட் எழுதிக்கொண்டோம்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

xv) இதில், 1வது நபர் கேட்டுக்கொள்ளும்போது 2 வது நபர் கிரய சாசனம் எழுதிக்கொடுக்க ஒப்புக்கொண்டு மேற்கண்ட ஆவணம் எழுதப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இருப்பினும், கிரய உடன்படிக்கை தொகையில் பாக்கித்தொகையான ரூ.600/-ல் ஒரு வருட கெடுவில் கொடுத்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்கண்ட பாக்கித்தொகை ரூ.600/-ஐ ஒரு வருட காலத்திற்குள் செலுத்தியிருந்தால் மட்டுமே 1 வது

நபர் கேட்டுக்கொள்ளும்போது 2 வது நபர் கிரய சாசனம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுகிறது என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

xvi) வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கால நிர்ணயம் செய்து எழுதப்படவில்லை என்பது ஏற்புடையது இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. வா.சா.ஆ.1 ஆவணம் 15.03.2001 ல் எழுதப்பட்டு ஓர் ஆண்டு கால நிர்ணயம் செய்யப்பட்டு அதிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யாமல் ஏறக்குறைய 9 ஆண்டுகளுக்கு மேல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.1 ஆவணத்தின் நிறைவேற்றம் குறித்து வாதிகள் தரப்பில் நிரூபித்தாலும், அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் குறித்த உண்மைதன்மையினை நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. ஆகவே, 15.03.2001 ம் தேதியிட்ட கிரய உடன்படிக்கை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என எழுவினா-1 மற்றும் எழுவினா-2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

### 9) <u>எழுவினா-3 க்கான தீர்வு</u> :-

வா.சா.ஆ.1 ஆவணப்படி கிரய உடன்படிக்கை தொகை ரூ.21,600/-ல் அட்வான்ஸ் தொகை ரூ.21,000/- போக மீதமுள்ள ரூ-600/-ஐ ஒரு வருட கெடுவான 15.03.2002 க்குள் 1ம் வாதி பிரதிவாதிகளின் தந்தைக்கு செலுத்தாததால் மேற்கண்ட 15.03.2001 ம் தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்றிட 1ம் வாதியானவர் தயாராகவும், விருப்பத்துடனும் இல்லை என எழுவினா-3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**10) <u>எழுவினா- 4 க்கான தீர்வு ;-</u>**

இந்த வழக்கானது காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், 15.03.2001ம் தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரம் சட்டப்படி பிரதிவாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றும், மேற்கண்ட ஆவணத்தை நிறைவேற்றிட 1ம் வாதி தயாராகவும், விருப்பத்துடனும் இல்லை என இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளதால் வாதிகள் கோருகின்ற ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என எழுவினா-4 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**11) <u>எழுவினா- 5 க்கான தீர்வு ;-</u>**

1ம் வாதியானவர் கிரய உடன்படிக்கையினை வாதிகள் தரப்பில் நிரூபிக்காததால் மாற்று பரிகாரம் வழங்க இயலாது என்றும், மேலும் வாதிகள் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ளதால் வழக்கின் தன்மையைக் கருத்திற்கொண்டு செலவுத் தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென எழுவினா-5 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**12) முடிவாக,**

1. தாவா செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.23 17:56:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** :-

| | |
|---|---|
| வா.சா.1 | திருமதி.அகிலாண்டேஷ்வரி (6 ம் வாதி), க/பெ.ரவிச்சந்திரன். |
| வா.சா.2 | திரு.கண்ணப்பன் (3 ம் தரப்பினர்), த/பெ. அருணாச்சலம். |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 15.03.2001 | 1 ம் வாதி பெயரில் உள்ள விற்பனை ஒப்பந்தத்தின் அசல். |
| வா.சா.ஆ.2 | 22.12.2010 | 1 ம் வாதி கொடுத்த அறிவிப்பு மற்றும் அஞ்சலக ஒப்புகை அட்டை அலுவலக நகல். |
| வா.சா.ஆ.3 | 06.01.2011 | 2 வது பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.4 | -- | 1 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு சார்வாகாமல் திரும்பி வந்த அஞ்சல் உறை. |
| வா.சா.ஆ.5 | -- | கல்யாணசுந்தரம் என்பவரின் வாரிசு சான்றிதழ் கணினி நகல். |
| வா.சா.ஆ.6 | -- | வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி (வா.சா.2 கண்ணப்பன்) கையெழுத்து. |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** :-

| | |
|---|---|
| பி.சா.1 | திருமதி.பானுமதி (2 ம் பிரதிவாதி), க/பெ.இளங்கோவன். |
| பி.சா.2 | திரு.துரைராஜ் (3 ம் தரப்பினர்), த/பெ. முருகையன். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :- இல்லை.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.23 17:56:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.